**நம்மாழ்வார் அருளிச் செய்த**
**திருவாய்மொழி**
**ஐந்தாம் பத்து**
**இதர விஷய வைராக்யத்தின் பலனாக, காருணிகனான எம்பெருமான் விஷயத்தில் காதல் மிக விஞ்சுதல்**

**முதல் திருவாய்மொழி - கையார் சக்கரத்து**
**உண்மையான அன்பு இல்லாதிருக்க, பொய்யாகப் பேசிய தமக்கு மெய்யான பேற்றை அளித்தான் என்று ஆழ்வார் எம்பெருமானது பேரருளைப் பேசுதல்**

** கையார் சக்கரத்து * என் கரு மாணிக்கமே! என்றென்று *
பொய்யே கைம்மை சொல்லிப் * புறமே புறமே ஆடி **
மெய்யே பெற்று ஒழிந்தேன் * விதி வாய்க்கின்று காப்பார் ஆர்? *
ஐயோ! கண்ண பிரான்! * அறையோ! இனிப் போனாலே 1

போனாய்! மா மருதின் நடுவே * என் பொல்லா மணியே! *
தேனே! இன் அமுதே! * என்றென்றே சில கூத்துச் சொல்ல **
தானேல் எம்பெருமான் * அவன் என் ஆகி ஒழிந்தான் *
வானே மா நிலமே * மற்று முற்றும் என் உள்ளனவே 2

உள்ளன மற்றுளவாப் * புறமே சில மாயம் சொல்லி *
வள்ளல்! மணி வண்ணனே! * என்றென்றே உன்னையும் வஞ்சிக்கும் **
கள்ள மனம் தவிர்ந்தே * உன்னைக் கண்டு கொண்டு உய்ந்து ஒழிந்தேன் *
வெள்ளத்தணைக் கிடந்தாய் * இனி உன்னை விட்டு என் கொள்வனே? 3

என் கொள்வன்? உன்னை விட்டு என்னும் * வாசகங்கள் சொல்லியும் *
வன் கள்வனேன் மனத்தை வலித்துக் * கண்ண நீர் கரந்து **
நின் கண் நெருங்க வைத்தே * எனதாவியை நீக்க கில்லேன் *
என் கண் மலினம் அறுத்து * என்னைக் கூவி அருளாய் கண்ணனே! 4

கண்ண பிரானை * விண்ணோர் கரு மாணிக்கத்தை அமுதை *
நண்ணியும் நண்ண கில்லேன் * நடுவே ஓர் உடம்பில் இட்டு **
திண்ணம் அழுந்தக் கட்டிப் * பல செய் வினை வன்கயிற்றால் *
புண்ணை மறைய வரிந்து * என்னைப் போர வைத்தாய் புறமே 5

புறம் அறக் கட்டிக் கொண்டு * இரு வல்வினையார் குமைக்கும் *
முறை முறை ஆக்கை புகல் ஒழியக் * கண்டு கொண்டு ஒழிந்தேன் **
நிறம் உடை நால் தடந்தோள் * செய்ய வாய் செய்ய தாமரைக் கண் *
அற முயல் ஆழி அங்கைக் * கரு மேனி அம்மான் தன்னையே 6

அம்மான் ஆழிப் பிரான் * அவன் எவ்விடத்தான்? யான் ஆர்? *
எம்மா பாவியர்க்கும் * விதி வாய்க்கின்று வாய்க்கும் கண்டீர் **
கைம்மா துன்பொழித்தாய்! என்று * கை தலை பூசல் இட்டே *
மெய் மாலாய் ஒழிந்தேன் * எம்பிரானும் என் மேலானே 7

மேலாத் தேவர்களும் * நிலத் தேவரும் மேவித் தொழும் *
மாலார் வந்து இன நாள் * அடியேன் மனத்தே மன்னினார் **
சேலேய் கண்ணியரும் * பெருஞ்செல்வமும் நன்மக்களும் *
மேலாத் தாய் தந்தையும் * அவரே இனி ஆவாரே 8

ஆவார் ஆர்? துணை என்று * அலை நீர்க் கடலுள் அழுந்தும்
நாவாய் போல் * பிறவிக் கடலுள் * நின்று நான் துளங்க **
தேவார் கோலத்தொடும் * திருச்சக்கரம் சங்கினொடும் *
ஆவா! என்று அருள் செய்து * அடியேனொடும் ஆனானே 9

ஆனான் ஆள் உடையான் என்று * அஃதே கொண்டு உகந்து வந்து *
தானே இன்னருள் செய்து * என்னை முற்றவும் தான் ஆனான் **
மீனாய் ஆமையுமாய் * நரசிங்கமுமாய்க் குறளாய் *
கானார் ஏனமுமாய்க் * கற்கியாம் இன்னம் கார் வண்ணனே 10

** கார் வண்ணன் கண்ண பிரான் * கமலத் தடங்கண்ணன் தன்னை *
ஏர் வள ஒண்கழனிக் * குருகூர்ச் சடகோபன் சொன்ன **
சீர் வண்ண ஒண்தமிழ்கள் * இவை ஆயிரத்துள் இப்பத்தும் *
ஆர் வண்ணத்தால் உரைப்பார் * அடிக் கீழ் புகுவார் பொலிந்தே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---